மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்


திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், பிச்சாண்டார்கோயில் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்:16A/38C,38D -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டப்பகுதி)

அளவுத்திட்டம் : 1 : 400.

கோப்பு எண் : SWP/OY9BY4A6/35689/2024.

வ



குறிப்புகள்:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	1.93 ஏக்கர் (7800 ச.மீ)
சாலையின் பரப்பளவு (ம) முலை முடக்கு நீங்கலாக மனைப்பிரிவின் பரப்பளவு	-	5378.65 ச.மீ.
மனைப்பிரிவு இடத்தின் எல்லை		
நிலையிலுள்ள சாலை		
கோரிய மனைகள்	-	39.
ஒதுக்கிய மனைகள்	-	39.
மனுதாரர் உபயோகம்	-	109.80 ச.மீ
பொது ஒதுக்கீடுகள்: (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டியவை.)		
மனைப்பிரிவு உத்தேச சாலை மற்றும் முலை முடக்குகள் பரப்பு	-	2421.35 ச.மீ
மின்சார உபயோகம்	-	35.55 ச.மீ (0.66%)
உள்ளாட்சி உபயோகம்	-	48.49 ச.மீ (0.90%)

குறிப்பு:

மனுதாரர் பூங்கா ஒதுக்கீட்டிற்கு பதிலாக 10.00%-க்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகை செலுத்துவதாக தெரிவித்துள்ளார்.

கட்டிட வரம்பு:

சாலையின் அகலம் 9.0மீ. வரை 1.50மீ, சாலையின் அகலம் 9.0மீ. முதல் 12.0மீ. வரை 3.0மீ.

சாலையின் அகலம் 12.0மீ. முதல் 24.0மீ. வரை 6.00மீ. என்ற அளவில் விடப்பட வேண்டும்.

முலை முடக்கு:

சாலையின் அகலம் 9.0மீ. முதல் 12.00மீ. வரை 1.50மீ x 1.50மீ மற்றும் சாலையின் அகலம் 12.00மீ. மேல் 4.50மீ x 4.50மீ என்ற அளவில் விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆழ்நீத நடவடிக்கையும் இல்லை என்பதையும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2) அரசாணை எண்: 71 ஊ.வ. (ம) உ.. துறை நாள்: 16.06.2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சியினால் வழங்கப்படும் சான்று மற்றும் அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:4.2.2019 -ன் படிவங்களின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

3) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

4) விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வனையின் நகலோடு, நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6' x 4' அளவிளான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

6) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

7) The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

8) அரசாணை எண்: 79 வீ.வ. (ம) ந.வ. துறை, நாள்: 4.5.2017 -ன் படி இந்த உத்தேச மனைப்பிரிவிற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (முத்தியச் சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47 -ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அரசுக்கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைத்து, செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும்.

9) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.தி / 3278/ 2024, நாள்:09.07.2024 மற்றும் 30.07.2024-ன் படி மனைப்பிரிவு இடத்திற்கு 23 அடி அகல ஊராட்சி சாலை அனுகுசாலையாக தடையின்மை சான்று பெறப்பட்டதின் அடிப்படையில் உத்தேச மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது. மேற்படி ஊராட்சி சாலையினை உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.

10) மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்தழுத்த மற்றும் உயர்மின் கம்பி பாதையினை மனுதார் தனது சொந்த செலவில் மாற்றி அமைத்துத் கொள்ளப்பட வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

குறிப்பு:

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ / ந.ஊ.இ.இ.(திமா) எண்:209 / 2024.

திட்ட அனுமதி எண்:157 / 2024.

இணை இயக்குநர்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

மு.கார்த்திக்

வரைவாளர் நிலை-3

ரெ.விஸ்வநாதன்

மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-2

Signature Not Verified
Signed by Assistant Director
Location: Tiruchirappalli
Date:2024.11.04 16:33:17

Signature Not Verified
Signed by Village Panchayat President
Location: Tiruchirappalli
Date:2025.03.07 13:43:31